# விசேஷ கவனிப்பு தேவைப்படும் கர்ப்பிணிகள்



கருத்தரிப்பதும், பிள்ளை பெறுவதும் இயற்கையான நிகழ்ச்சி தான், இருந்தாலும், சில நேரங்களில் இவை பிரச்சினைக்குரியதாக ஆகிவிடுகின்றன. இந்த ஏட்டில் கண்டுள்ள குணாம்சங்கள் உள்ள கர்ப்பிணிகளுக்கு விசேஷ மருத்துவ கவனிப்பு தேவை. கர்ப்பம் என்று தெரிந்தது முதல் தொடர்ந்து மருத்துவப் பரிசோதனைக்குச் செல்வது அவசியம்.

1. முதல் பிரசவத்தில் அறுவை சிகிச்சை செய்து வயிற்றில் தையல் போட்டிருப்பவர்கள்

2. மிகவும் குள்ளமாக இருப்பவர்கள்.

3. காலிலோ இடுப்பிலோ ஊனங்கள் உள்ளவர்கள்.

4. கடந்த முறை கர்ப்பமானபோது உதிரப்போக்கு இருந்தவர்கள் அல்லது கடந்த பிரசவத்தின்போது மிகவும் அதிகமான உதிரப்போக்கு இருந்தவர்கள்.



5.i) கடந்த பிரசவம் கடினமாக இருந்தவர்கள் உதாரணமாக நஞ்சு

வெளிவர மிகவும் தாமதமாகியது.

ii) அல்லது, குழந்தை இறந்து பிறந்தது

iii) அல்லது, நிறைமாதம் ஆகும் முன்பே பிரசவமாகிவிட்டது.



ஏற்கனவே ஐந்தோ அதற்கும் அதிகமாகவோ குழந்தைகள் உள்ளவர்கள்.

35 வயதுக்கு மேற்பட்டவர்களும் 18 வயதுக்குக் குறைந்தவர்களும்

அந்தந்த மாதத்திற்கு ஏற்ற அளவைவிட வயிறு மிகவும் பெரிதாக உள்ளவர்கள்.

மிகவும் மெலிந்த தோற்றம் உள்ளவர்கள்.



